பாபு, நவீன் இளங்கோ

# நான்ஸ்டாப் என்கவுன்டர்

# வேகமெடுக்கும் சட்டம் ஒழுங்கு







‘குமாரு அதைக் கொஞ்சம் உள்ள வை குமாரு. ச்சும்மா பொசுக் பொசுக்குன்னு எடுத்து பொட் பொட்னு போட்னே இருக்க’- இப்படிதான் சென்னை பெருநகர போலீஸ் பற்றிய கெத்து மீம் ஒன்று தமிழக காவல்துறை வட்டாரத்தில் செம்ம வைரலாகியுள்ளது. திருவேங்கடம், காக்காதோப்பு பாலாஜி, சீசிங் ராஜா என்று கொடூரக் கொலை குற்றவாளிகளை சென்னை சிட்டி போலீஸார் வரிசையாக என்கவுன்டரில் போட்டுத் தள்ளிக் கொண்டேயுள்ளனர். பெரிய பெரிய தாதாக்களே, ‘அம்மா சத்தியமா நான் ரவுடியில்ல’ என்று அலறுகிறார்கள். இது தொடருமா, அடுத்த ஹிட் லிஸ்ட்டில் இருப்பவர்கள் யார்?

### ஆந்திராவில் அடைக்கலம்

*ஆந்திராவையும் தமிழ்நாட்டையும் நிலமும் பாலமும் மட்டுமல்ல கர்ண கொடூர கொலைக்குற்றவாளிகளும் இணைக்கிறார்கள் ஏன்கிற உண்மை எத்தனை பேருக்குத் தெரியும்? அக்கட எவனையாச்சும் போட்டுட்டு இக்கட வந்து பதுங்குவது அல்லது இக்கட எவனையாவது முடிச்சுட்டு அக்கட போய் ஒளியுறது என்று இரு மாநில தாதாக்களும் தங்களோட பதுங்கு குழிகளாக தமிழ்நாடு, ஆந்திராவை பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.*

ம.செந்தில்நாதன்

தாம்பரம் முழுவதும் 'தேடப்படும் குற்றவாளி' என சீசிங் ராஜா படம் போட்ட போஸ்டர் ஒட்டப்பட்டது. ஆம்ஸ்ட்ராங் கொலையில் தன்னை போலீஸ் என்கவுன்டர் செய்துவிடுவார்கள் என சீசிங் ராஜாவுக்குத் தெரியும். 'நான் இங்கு இருந்தால் என்னை என்கவுன்டர் செய்துவிடுவார்கள்' என்று பயந்து ஆந்திராவில் உள்ள தனது 4வது மனைவியிடம் சீசிங் ராஜா அடைக்கலமானார். அப்போதும் விடாமல், ஆந்திராவில் இருந்து சீசிங் ராஜாவை சேஸ் செய்து வந்து நீலாங்கரையில் வைத்து காவல்துறை என்கவுன்டர் செய்திருக்கிறது.

### க்ரைம் ஸ்குவாட் - ஓ.சி.ஐ.யு

திருவேங்கடம், காக்காதோப்பு பாலாஜியைத் தொடர்ந்து சீசிங் ராஜா என்கவுன்டர் தற்போது சீரியஸ் விவாதப்பொருளாகி இருக்கும் நிலையில், இதுதொடர்பாக காவல்துறை உயரதிகாரி ஒருவரிடம் பேசினோம். "ஆம்ஸ்ட்ராங் படுகொலை சம்பவத்தைத் தொடர்ந்து தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டதாக எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சனம் செய்தன.

இதையடுத்து, சென்னை மாநகர கமிஷனராக இருந்த சந்தீப்ராய் ரத்தோர் மாற்றப்பட்டு அருண் நியமிக்கப்பட்டார். அவர் பொறுப்பேற்றதும், 'சென்னை மாநகரில் ரவுடிகளை கட்டுப்படுத்துவதே என் முதல் பணி. ரவுடிகள் முற்றிலும் பூஜ்யம் ஆகும் வரை என்கவுன்டர் நடவடிக்கை தொடரட்டும் என மேலிடத்தில் இருந்தும் சிக்னல் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

தவிர, ஓ.சி.ஐ.யு (ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவு) அமைப்பு டி.ஜி.பி. அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. இது, தமிழகம் முழுவதும் உள்ள ரவுடிகளின் கண்காணிப்பை தீவிரப்படுத்தி இருக்கிறது. எஸ்.பி. தலைமையில் 38 மாவட்ட இன்ஸ்பெக்டர்கள் கொண்ட குழுவும் உருவாக்கப்பட்டுள்ளது.

### 19,834 ரவுடிகள்!

குற்றச் சம்பவங்களில் தொடர்புடைய ரவுடிகளை ஏ ப்ளஸ், ஏ, பி, சி என நான்கு பிரிவுகளாக போலீஸ் வகைப்படுத்தி உள்ளது. அந்தவகையில் தமிழகம் முழுவதும் 19 ஆயிரத்து 834 பேர் ரவுடிகள் பட்டியலில் உள்ளனர். சென்னையில் மட்டும் 4,100 ரவுடிகள் கண்காணிப்பு வளையத்தில் உள்ளனர். இதில் சென்னையைச் சேர்ந்த 750 ரவுடிகள் சிறையில் உள்ளனர். சென்னைக்கு அடுத்தபடியாக நெல்லை, மதுரை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் ரவுடிகளின் எண்ணிக்கை அதிகம்.

### ஹிட் லிஸ்ட் ரவுடிகள்

ஆம்ஸ்ட்ராங் கொலையில் 'சம்பவ' செந்தில்

# காக்கிகள் லிஸ்ட்டில் பாக்கி ரவுடிகள் யார்?

ஒடுக்கப்படுவார்கள். ரவுடிகளுக்கு எந்த மொழி புரியுமோ, அந்த மொழியிலேயே நடவடிக்கை எடுக்கப்படும்' என்று ஆவேசம் காட்டினார்.

சென்னை மாநகரில் இரண்டு உதவி ஆணையர்கள், இரண்டு ஆய்வாளர்கள் அடங்கிய சீரியஸ் க்ரைம் ஸ்குவாட் செயல்பட்டு வருகிறது. இந்த டீம் குற்றப்பதிவேடு குற்றவாளிகளை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இந்த டீமை அழைத்து போலீஸ் கமிஷனர் அருண் நாள்தோறும் ஆலோசனை நடத்துகிறார். ஆக்டிவ் மற்றும் இன் ஆக்டிவ் ரவுடிகளின் பட்டியலைக் கேட்டு வாங்கி, சில அறிவுறுத்தல்களையும் வழங்கிவருகிறார். அதன் பலனாக கடந்த இரண்டரை மாதங்களில் திருவேங்கடம், காக்கா தோப்பு பாலாஜி, சீசிங் ராஜா என மூன்று என்கவுன்டர்களை தலைநகர் போலீஸ் நிகழ்த்தியுள்ளது. ரவுடிகள் ராஜ்யம், தேடப்படும் குற்றவாளி. 'பாம்' சரவணன் தமிழக பி.எஸ்.பி. முன்னாள் தலைவர் தென்னரசுவின் தம்பி ஆவார். ஆற்காடு சுரேஷின் எதிர்கோஷ்டியைச் சேர்ந்த இவரும் ஆம்ஸ்ட்ராங் கொலைக்கு பழிவாங்க தயாராகி வருவதால் போலீஸ் இவர் மீதும் கண்காணிப்பை தீவிரப்படுத்தி வருகிறது" என்றவர், போலீஸாரின் தீவிர கண்காணிப்பில் இருக்கும் ஹிட் லிஸ்ட் பட்டியலையும் விவரித்தார்.

"கல்வெட்டு ரவி 30க்கும் மேற்பட்ட குற்றச் சம்பவங்களில் தொடர்புடையவர். பல வழக்குகளில் சிறைக்குச் சென்று தண்டனை பெற்றவர். ஓராண்டுக்கு முன்புதான் பா.ஜ.க.வில் இணைந்து, திருந்தி வாழ ஆசைப்படுவதாக டி.ஜி.பி.யிடம் மனு அளித்திருக்கிறார். ஆனாலும் காவல்துறையின் கண்காணிப்பில் இருந்துவருகிறார்.

2021 சட்டமன்றத் தேர்தலில் ஸ்ரீபெரும்புதூர்

தொகுதியில் குன்றத்தூர் வைரம் சுயேச்சையாக போட்டியிட்டார். ஸ்ரீபெரும்புதூரில் உள்ள தொழிற்சாலைகளில் 'ஸ்க்ராப்' பிசினஸில் மிரட்டியதாக இவர்மீது 2 கொலை உட்பட 10 வழக்குகள் உள்ளன. ஆம்ஸ்ட்ராங் கொலைக்கு ஸ்க்ராப் பிசினஸ் முக்கிய காரணம் என போலீஸ் நம்புகிறது. இதனாலே குன்றத்தூர் வைரத்தை போலீஸ் தீவிரமாக நோட்டமிட்டு வருகிறது.

இதேபோல எண்ணூர் தனசேகரன், நாகேந்திரன், சாமி ரவி, சீர்காழி சத்யா ஆகியோர் சிறையில் இருக்கிறார்கள். என்றாலும் அங்கிருந்தபடியே பல்வேறு குற்றச்சம்பவங்களுக்கு ஸ்கெட்ச் போட்டுக் கொடுப்பதாக டிபார்ட்மென்ட் சந்தேகப்படுகிறது. அதனால் இவர்களின் நெட்வொர்க்கையும் காவல்துறை தீவிர கண்காணிப்பு வளையத்தில் வைத்துள்ளது.

திண்டுக்கல் மோகன்ராம் நெட்ஒர்க்கில் உள்ளவர்களின் பெரிய பட்டியலை கையில் வைத்து போலீஸ் தீவிர கண்காணிப்பு நடத்தி வருகிறது. தவிர சூழ்ச்சி சுரேஷ், ரெட்ஹில்ஸ் சேதுபதி, நெற்குன்றம் சூர்யா, சைலு என்கிற சைலேந்திரன், தொப்ப கணேஷ், அகரம் கதிர் என பலரும் இந்த ஹிட் லிஸ்ட்டில் உள்ளனர்.

## சம்பவ செந்திலுக்கு ஸ்கெட்ச்!

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள தனிப்படை சம்பவ செந்திலை தீவிரமாகத் தேடி வருகிறது. ஆனால் அவர் மலேசியா, தாய்லாந்து என நாடு நாடாக பறந்துகொண்டிருப்பதாக தகவல் கிடைக்கவே இண்டர்போல் உதவியை நாடியுள்ளது. தனது வலதுகரமான மொட்டை கிருஷ்ணன் மூலமே ஆம்ஸ்ட்ராங் கொலையை சம்பவ செந்தில் அரங்கேற்றியதாக சொல்லப்படுகிறது. அந்த மொட்டை கிருஷ்ணனும் தற்போது சம்பவ செந்திலோடு சுற்றிக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. சம்பவ செந்திலை பிடிப்பதில் தாமதம் ஏற்படுவதால், மொட்டை கிருஷ்ணனை டார்கெட் செய்துவருகிறது போலீஸ்.

## அதிகாலை என்கவுன்டர்!

இதனால் எதிர்வரும் நாட்களிலும் என்கவுன்டர் நடவடிக்கை மேற்கொள்ள தயார் நிலையில் இருக்குமாறு காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. என்கவுன்டர் பட்டியலை கையில் வைத்திருக்கும் காவல்துறை அதிகாரிகள், அதனை அதிகாலை வேளையில் செய்யவும் முடிவு செய்திருக்கிறார்கள். மேலும் என்கவுன்டருக்கான ஸ்பாட்டுகளையும் காவல்துறை மார்க் செய்து வைத்துள்ளது. அதாவது ஆள் நடமாட்டம் இல்லாத புறநகர் பகுதிகளாகவும் குற்றவாளிகள் தப்பித்து செல்லமுடியாத இடங்களாகவும் காவல்துறை 'டிக்' அடித்து வைத்துள்ளது. ரவுடிகளின் கொட்டத்தை என்கவுன்டர் ஒன்றுதான் அடக்கும்" என்று நீண்ட பெருமூச்சுடன் சொல்லி முடித்தார்.

என்கவுன்டர் சம்பவம் குறித்து மக்கள் கண்காணிப்பகம் இயக்குநர் ஹென்றி திபேனிடம் பேசினோம். "ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் உரிய நியாயம் கிடைக்க வேண்டும் என நினைக்கிறேன். இந்த வழக்கில் 29 பேர் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். இதில் திருவேங்கடம், காக்காதோப்பு பாலாஜி ஆகிய இரண்டு பேர் என்கவுன்டர் செய்யப்பட்டிருக்கிறார்கள். திருவேங்கடம் சரண்டர் ஆகி, அவரை போலீஸ் கஸ்டடியில் எடுத்து இருக்கிறது. காக்கா பாலாஜியைப் பிடிக்க முற்பட்ட போது, தாக்கிவிட்டு ஓடியதால் என்கவுன்டர் செய்ததாக போலீஸ் சொல்கிறது. கொலை வழக்கு குற்றவாளிகளை கைவிலங்கு போட்டு அழைத்துத்தானே சென்றிருக்க வேண்டும்?

அப்படிச் செய்திருந்தால் எப்படி அவர்கள் தாக்க முற்பட்டு இருப்பார்கள்? சீசிங் ராஜா கைது செய்யப்பட்டு அவரும் என்கவுன்டர் செய்யப்பட்டு இருக்கிறார். அதுமட்டுமின்றி, இரண்டு வழக்கிலும் அதிகாலை 5.30 மணிக்கு விசாரணைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய அவசியம் என்ன? இந்த என்கவுன்டர்கள் குறித்து போலீஸ்' தரப்பு சொல்வது அனைத்தும் பொய்" என தெரிவித்தார்.

சென்னை தெற்கு இணை ஆணையர் சிபி சக்ரவர்த்தியிடம் பேசினோம். "காவல் அதிகாரிகளை சுட சீசிங் ராஜா முற்பட்டார். அப்போது தற்காப்புக்காகத்தான் போலீஸார் அவரை சுட நேர்ந்தது. குற்றவாளிகளைப் பிடித்து நீதிமன்றத்தில் ஒப்படைப்பதே எங்கள் நோக்கம். மற்றபடி திட்டமிட்டு யாரையும் போலீஸார் என்கவுன்டர் செய்வது கிடையாது" என்றார்.

சட்டம் சட்டப்படி தன் கடமையை செய்யட்டும்!

### 40 மாதங்களில் 16 என்கவுன்டர்!

இதுவரை என்கவுன்டர் செய்யப்பட்டவர்களில் பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த ரவுடிகள் யாரும் இல்லை. அந்த ரவுடிகள் மீது நடவடிக்கை எடுக்க போலீஸ் கொஞ்சம் தயக்கம் காட்டி வருகிறது. இதற்குக் காரணம் அரசியல் அழுத்தமும் இருப்பதாக சொல்லப்படுகிறது.

2001 - 2006 அ.தி.மு.க. ஆட்சியில் 29 என்கவுன்டர் சம்பவங்கள் நடந்தன. 2006 - 2011 தி.மு.க. ஆட்சியில் 31 என்கவுன்டர்கள் அரங்கேறின. 2011 - 2021 காலகட்ட 10 ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் 27 என்கவுன்டர் சம்பவங்களே நடந்துள்ளன. ஆனால் 2021 மே மாதம் முதல் 2024 செப்டம்பர் மாதம் வரை 16 என்கவுன்டர்களை காவல்துறை மேற்கொண்டுள்ளது!